Written by - மமேன்கவி -
Friday, 04 August 2017 22:02 - Last Updated Sunday, 06 August 2017 09:14

- எழுத்தாளர் மமேன்கவி அவர்கள் எழுத்தாளர் ஏ.இக்பாலின் மறைவு பற்றி மகநலில் அறியத்தந்திருந்தார். அவரது சயெ்தியினைப் பகிர்ந்துகொள்வதுடன் எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தரிவித்துக்கொள்கின்றோம். - பதிவுகள் -

இக்பால், ஏ. (1938.02.11) அம்பாறை, அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும் களுத்துறை, தர்காநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கவிஞர். இவர் அக்கரைப்பற்று றோமன் கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் கல்வி கற்றார். ஆசிரியராகக் கல்விச் சவேயை ஆரம்பித்த இவர், தமிழ்ப் பாடநல் ஆலோசனை சபை உறுப்பினராகவும், இஸ்லாமிய பாடநல் எழுத்தாளராகவும், ஆசிரிய கலாசாலையில் வரலாற்று விரிவுரையாளராகவும், கல்வியியற் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவர் மட்டக்களப்பு தறெ்கு மற்பாேக்கு எழுத்தாளர் சங்கச் சயெலாளராகவும், முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் சயெலாளராகவும், தர்க்காநகர் பதிப்பு வட்ட பதிப்பு உதவியாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

லப்கி, அபஜாவித், கீ ர்த்தி, கலா பாேன்ற பனைபையெர்களைக் கொண்ட இவர், இலங்கதை் தசேிய பத்திரிகைகளிலும், முக்கியமான சஞ்சிகைகளிலும் மாத்திரமின்றி எக்ஸில், முஸ்லிம் முரசு, பிறை, நடை, தீ பம் முதலிய பிற நாட்டுச் சஞ்சிகைகளிலும் இவரது ஆக்கங்கள் வளெியாகியுள்ளன. இவர் முஸ்லிம் கலசை்சூடர் மணிகள், மளெலானா ரூமியின் சிந்தனைகள், மறுமலர்ச்சித் தந்தை, பண்பயர் மனிதன் பாக்கீ ர் மாக்கார், கல்வி ஊற்றுக் கண்களில் ஒன்று, நம்ப முடியாத உண்மைகள், பிரசுரம் பறொத கவிதைகள், ஏ. இக்பால் கவிதைகள் நூறு, இலக்கிய ஊற்று (13 கட்டுரைகளின் ஊற்று), மாயத் தாேற்றம், வித்து, மயெ்ம்மை, பாதுமை முதலான நல்களையும் கல்வி, இலக்கியம், மாழி, வரலாறு தாெடர்பான ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். 2002 இல் தமிழ் நாட்டில் இடம்பறெ்ற உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து காெண்டு நாட்டாரியல் தாெடர்பான ஆய்வுக்கட்டுரையைச் சமர்ப்பித்துள்ளார். இலக்கியத் துறைக்கும் அப்பால் நான்கு தசாப்தங்களுக்கு மலோக இலங்கை

அஞ்சலி : மூத்த இலக்கியவாதி ஏ .இக்பால் மறைவு !

Written by - மேமன்கவி -
Friday, 04 August 2017 22:02 - Last Updated Sunday, 06 August 2017 09:14

வானொலி தமிழ் - முஸ்லிம் சேவைகளில் பங்களிப்பு செய்து வந்துள்ளார்.

இவர் 'மறுமலர்ச்சித் தந்தை' என்ற நூலுக்காக சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுள்ளார். இலக்கிய உலகில் இவரது ஆளுமையையும், இவர் ஆற்றிய சேவையையும் பாராட்டி கவிஞர், இலக்கியமணி, கலாபூசணம், இலக்கிய வாரிதி, இலக்கிய விற்பன்னர், தமிழ் மாமணி முதலான பட்டங்களை அரசு, தகுதிசார் தனியார் நிறுவனங்கள் வழங்கிக் கௌரவித்துள்ளன."

2 / 2